ஓம்

தமிழுக்கு வெற்றி!

# திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும்

(பாடுவார் முத்தப்ப செட்டியார்)

பதிப்பாசிரியர்கள்:

இளவரசன். நா. நடராஜன்

ராம. நாகப்பன் (விராமநி)

பொருள் உதவியவர்கள்:

குழ. மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்

மெ. குழ. மு. முத்தையா செட்டியார் அவர்கள்

கீழச்சிவல்பட்டி.

மன்னவன் வெளியீடு

கீழச்சிவல்பட்டி — ராமநாதபுரம் மாவட்டம்

MANNAVAN PUBLICATIONS.

Kilasavalpatti (P.O.) Ramnad Dist.

மலேயாவில் 60 காசு

ல் அணு 0-12-0

...கதே

...: 5. நட்சத்

ஓம்

# முத்தப்பர் வழிபாடு

"தமிழ்மாறன்"

### பல்லவி

வாழ்த்தி வணங்குவமே நாம்
வாழ்த்தி வணங்குவமே

### அனுபல்லவி

சீர்த்திமி குந்திடும் வணிகர் நல் வாழ்வுறச்
செய்திடுசெந் தமிழ்ப் பாவலனை (வாழ்த்தி)

### சரணங்கள்

1. முத்தமிழ் போற்றிய வித்தகனைத்—தமிழ்
முழுதுலகாள்வகை செய்தவனைச்
சித்தனை நற்றமிழ் நாவலனை—அறம்
செய்துயர் வணிகர்தம் சீமானை (வாழ்த்தி)

2. சிவநகர் புகழ்பெற வந்தவனை—மிகச்
[1]செருக்குடைப் புலவனை வென்றவனைத்
தவநிறை புலவரின் நட்பினனை—அவர்
தம்மைவன் சிறையது மீட்டவனை (வாழ்த்தி)

3. பாவினம் யாத்தலில் வல்லவனைத்—தமிழ்ப்
பண்புநி றைந்திட வாழ்ந்தவனைத்
தேவினை யொத்தருள் செய்தவனை—எங்கள்
தெய்வத் தமிழ் நிறை முத்தப்பனை (வாழ்த்தி)

4. ஐப்பசியில் வளர் [2]ஆறினிலே—திறம்
அமைந்திடு சூரனை வேல் முருகன்
ஒப்புடன் வென்றிடு நாளினிலே—தமிழ்
நிலை மேவிடும் நாளிதிலே (வாழ்த்தி)

---

1. புலிக் கவிராயர், 2. பூர்வபட்சம்—சஷ்டி.

ஓம்

தமிழுக்கு வெற்றி

பாடுவார் முத்தப்பர் வணிகர் பேரில் பாடிய

# திருமுக விலாசம்

## காப்பு—வெண்பா

" இருநிதியம் சேருகின்ற எழ்நகரத் தார்மேல்
திருமுக விலாசமது செப்ப—அருளாற்
குணபதியா மீசன் குழவியென உற்ற
கணபதிபொற் றாள்மலரே காப்பு."

## நூல்—கலி வெண்பா

1. கங்கை நதிதரித்தோர் கண்ணுதலார் சூரனுக்குச்
சங்கையிலா வாழ்வு தனைக்கொடுக்க—அங்கவனும்
2. தேவாதி கட்கிடுக்கம் செய்ததனால் இந்திரன்பால்
தேவாதி கள் பலரும் சென்றடைந்து—பூவாளி
3. வேளை [1] அரனிடத்தில் மேவிச் [2] சுரர் இடுக்கணை
தூளாய்ப் பறந்திடவே சொல்லுமென்றார்—
வேள் சிவன்பால்
4. சென்றான் அமரர் சொன்ன செய்தியெல்லாம் ஈசன் முன்பு
நின்றாங்கு (உ)ரையான் நிகரில் [3] மதன்—[4] மன்றல் மிகு
5. பூவாளி அச்சிவன்மேல் பொங்குமழை போல் நின்று
தூவினான் ஈசன் இவன் துஷ்டனென்றே—தாவி மதன்
6. தன்னை எரித்திடவே தானவரும் வானவரும் [விட்(டு)
புன்னும் ஜெபம்தபஞ் செய் பண்ணவரும்—தன்னில்
7. ஓடினார் அன்னார் ஒருகோடி யாய்த் திரண்டு
கூடினார் இந்திரன் பால் கோவென்றே—கூடுமுன்னே
8. [5] சத்தரிஷி மாதர் தமக்கு அக்கினி பகவான்
மெத்த மயல் கொண்டவன் தன் வீட்டில் வந்து—
சித்தம் நொந்தே

---

1. சிவன். 2. தேவர்கள். 3. மன்மதன். 4. வாசனை. 5. நட்சத்திர வடிவிலுள்ள ஏழு முனிவர்கள்.

9. அன்னம் அருந்தாது இருந்தான் ஆகச் [6]சுவாகாள்
என்ன வென்றான் உள்ளதியம்பினான்—நன்னயமாய்
10. என்றான் [7]திராணி இனி யறிவீர் சத்தரிஷி
துன்றுமட வார்கள் உனைத் தோயவே—ஒன்றும் [8]உத்தி
11. செய்வன் என்றாள் நல்லதெனச் சிந்தை மகிழ்ந்து அக்கினிதான்
மெய்பொடித்தான் சத்தரிஷி மின்னாரில்—மைவிழியாள்
12. ஆறு ரிஷி மாதர்வடி வாகிச் சுவாகாள்தான்
தேற ஒண்ணா ஆசைதனைத் தீர்ப்பையென்று—கூறிடவே
13. ஒவ்வொருத்தி பால் சென்று (உ)லகத்தில் தன் மனசு
செவ்வையொத்துக் கொண்டுமயல் தீர்ந்தனனே—திவ்ய
14. [9]அருந்ததியைப் போல வடிவு ஆகமாட்டாது உள்ளம்
வருந்திக் கணவனிடம் வந்தாள்—திருந்திழையாள்
15. இன்னொருத்தி ஏது வரவில்லை என்றான் உள்ளபடி
சொன்னவற்றைக் கேட்டுத் துயர்தீர்ந்தான்—இந்நிலத்தில்
16. சத்தரிஷி ஞானதிருஷ்டி தன்னால் அறிந்து கம
லத்துமட வாரை யருகழைத்துச்—சத்தி
17. அருந்ததிகற் புக்கு (உ)ங்கள் ஆறுபேர் கற்பும்
பரிந்து பற்று(து) என்று பகர்ந்து—திருந்தும்
18. சரவணப்பொய் கைக்குள் தவசு செய்வீர் என்றே
அரிவையரைப் போம் என்று அனுப்பத்—திருநுதலார்
19. சத்தரிஷி வாக்கால் சரவணப்பொய் கைக்குள் வந்து
சத்தியமே எண்ணித் தவம் செய்தார்—உற்ற [10]தெய்வ
20. மன்னவனும் தேவர்களும் வந்து அக்கினிபகவான்
தன்னை அருகழைத்துச் சாற்றினார்—என்ன வென்றால்
21. [11]சூரன் செயும் [12]இடுக்கண் [13]சோமன் தரித்தவர் பால்
நீர் உரைத்து மீளும் என்றார் நேசமாய்ச்—சீருடனே
22. செல்லுமுன்னே மாலாய்ச் சிவனும் [14]இடப்பாக
மெல்லியளும் ஒன்றான வேளையிலே—மெல்ல நடந்(து)

---

6. அக்கினியின் மனைவி. 7. வல்லமை. 8. தந்திரம். 9. ஏழு முனிவரில் ஒருவராகிய வசிஷ்டரின் மனைவி. கற்பில் உயர்ந்தவள். 10. தேவேந்திரன். 11. சூரபத்மன்; வலிமிக்க அசுரன். 12. துன்பம். 13. சந்திரன். 14. பார்வதி.

23. அக்கினியோன் பொறக்கதவை அண்ணினுன் மெய்வெளிச்சம்
மிக்கசுடர் போலே விளங்கி யதால்—திக்கெனவே
24. சங்கரரும் அக்கினியோன் தன்னைக் கண்டே மனசு
[15]சங்கோசமாய் விரைந்து தாமெழுந்தார்—அங்கவர்க்கு
25. [16]விந்து பிரவேசிக்க "வீறும் எழில் அக்கினியே
வந்து கையில் ஏந்தென" வழுத்தினர்—அந்த
26. அரன் விந்தைத் தாங்கி நின்ற அக்கினியோன் தன்னைத்
"திறமாக இந்த விந்தைச் சீராய்—உரமாகத்
27. தாட்டிகமாய்க் கொண்டேகிச் சரவணப்பொய் கைக்குள் இதைப்
போட்டுவிடும்" என்னப் புகன்றதனைக்—கேட்டவனும்
28. அக்கணமே விந்து தன்னை அந்தச் சரவணப் பொய்
கைக்குள்விட்டு வந்தான் கருணையுடன்—மிக்க விந்தும்
29. ஆறுகுழந் தைகளாய் அக்கங்கையிற் பிறந்து
மீறிவிளை யாடும் வேளையிலே—கூறிய
30. ஈசுரரும் ஈஸ்வரியும் ஏகாந்தமாக அந்த
வாசமிகு மாநதியில் வந்திடவே—ஈஸ்வரி பார்த்(து)
31. இந்தநதி யிற்குழந்தை ஏதென்றுள் தேவர் பிரான்
உந்தன் குழந்தை யென்றூர் உண்மகிழ்ந்து—விந்தையுடன்
32. ஆறுதலை யும்சேர்த்து ஆவலுடன் ஆசை
மீறியெடுத்து மடி மீதில் வைத்தே—ஆறிரண்டு
33. காலும் உருவியிரு காலாக்கிச் சேர்த் தெடுத்துப்
பாலொழுகு வாயொடுகை பன்னிரண்டாய்ச்—சீலமுடன்
34. ஆறு [17]சிரசாய்த் தேவர்க்(கு) ஆறுதலையாம் எனப்பேர்
ஆறுமுகம் என்றே அரனுரைக்க—வீறும்
35. உமையும் திருமுலைப்பால் ஊட்டிக் கொடுபோம்
ச(ஸ)மயத்தில் அங்கே தவஞ்செய்—[18]அமை நிகர்தோள்
36. சத்தரிஷி மாதர் அரன் தான் பணிந்து தங்களுக்குப்
புத்தி யென்ன? என்று புகன்றூர்கள்—அத்தரும் பார்த்(து)
37. இந்தக் குழந்தையைக்கேள் என்ன அவர் கேட்கச்
சிந்தை மகிழ்மதலை செப்பும் அன்று—முந்துலகில்

---

15. கூச்சம். 16. உயிர்த் துளி; இந்திரியம். 17. தலை. 18. மூங்கில் (போன்ற தோள்)

38. கார்த்திகை நட் சேத்திரம் கருதுவோர் தங்கள் வினை
மாற்றி அவர் கேட்ட வரம் கொடுப்பேன்—கார்த்திகை நட்
39. சேத்திரப்பதவியிலே செல்லுவீர் என்று துயர்
ஆற்றி மட வாரை அனுப்புவித்துச்—[19]சூத்திரங்கள்
40. செய்த சுவாகாள் தனக்கும் சேவித்தோர் தங்களுக்கும்
மெய்யிலங்கு பீடையொடு விக்கினங்கள்—எய்துகின்ற
41. போதினவையெல்லாம் தீர்ந்து போகச் சுவாகாள் என்(று)
ஓத உடனே பயங்கொண்டோடுமே—ஆதலினால்
42. அந்தப்பெருமை உமக்கென்று அவர் சொல்லச்
சிந்தை மகிழ்ந்து சிவனவரும்—பிந்தா(து)
43. எடுக்கி இரு கரத்தால் எந்தி உமையாள் பால்
கொடுக்க வளர்ந்த குமரேசா—மடுக்கரையில்
44. வண்டாடும் பூங்கமல மாதுவிளையாடி வளர்
குன்றுக்குடியில் குமரேசா—சென்றன்று
45. வீறும் அசுரர் குலம் வேரறுத்துச் சூரனுடல்
கூறுப்ப் பிளந்த குமரேசா—தாரணியில்
46. அற்றவர்க்குத் [20]தாரகமாய் அண்டர்கள் நாட்டுக்குக்
கொற்றவனாய் வந்த குமரேசா—உற்ற சுடர்
47. அம்பனைய கண்ணாள் தெய்வானை குறவள்ளி இரு
கொம்பனையர்க்(கு) ஏற்ற குமரேசா—நம்புதலாய்த்
48. தேடும் அடியார்தமது சிந்தைதனி லேயிருந்து
கூடி விளையாடும் குமரேசா—தாடாண்மை
49. அன்றசுரர் நெஞ்சம் அதிர்கனக வேல்வாங்கிக்
குன்றுருவ எய்த குமரேசா—மன்றுள்
50. நலத்தையறியாய்ச் சமணர் [21]நான்கிரண்டாயிரரைக்
கொலைக்கழுவில் இட்ட குமரேசா—பலத்தெழுந்து
51. நீலநிறச் சேவல்தன்னை நித்தங்கையிற்பிடித்துக்
கோலமயில் ஏறுங் குமரேசா—சாலவே
52. மிடிதீர்த்து அமரர்தமை மிக்கதெய்வ லோகம்
குடியேற்றி வைத்த குமரேசா—ப்டிபுகழும்
53. சந்திரசேகரர்க்கும் தையல்சவுந்தரிக்கும்
சிந்தை களி கூர்வந்த சேயனே—அந்தம் உயர்

---

19. சூழ்ச்சிகள். 20. துணை, கெதி. 21. எண்ணாயிரம்பேர்.

54. மால்மருகா கங்கை மகனேவேள் மைத்துனனே
வேல்முருகா யாவருக்கும் மெய்ப்பொருளே—கர்ன்சேர்
55. [22]ஒரு மான் மகள்தனுடன் உற்ற [23]தெய்வமங்கை
இரு மாதருக்கும் இறைவா—கருணைதரும்
56. மும்மூர்த் திகள்தமக்கும் மூர்த்தியே நால்வேதச்
[24]சிம்மா சனத்திருக்கும் தேவனே—செம்மைமிகும்
57. [25]அஞ்சு முகன்உதவும் ஆறுமுகனே எழு
[26]மஞ்சுலவு மங்கை மலையோனே—[27]ரஞ்சிதமாய்
58. எட்டானைக் கொம்பை நெஞ்சில் ஏற்றிரத்னப் பந்திகளைத்
திட்டமுடனேயழுத்தும் சேவகத்தில்—கெட்டியெனும்
59. பத்துமுடி ராவணனைப் பட்டுருவ வாளிதொட்ட
[28]கைத்திகிரி யோன்மருகா காவலனே—இத்தரையில்
60. தன்னந் தனித்தவர்க்கும் சாலப் பசித்தவர்க்கும்
[29]அன்னம் கொடுத்(து) ஆதரிப்பவனே—இந்நிலத்தில்
61. கார்த்திகை நட் சேத்திரங் கருதுவோர் சஞ்சலத்தைத்
தீர்த்துப் பலன்பெருகச் செய்பவனே—சாற்றரிய
62. சஷ்டி விரதம் தனையநுஷ்டிப்போர்கள் தமை
மட்டிலாப் பாக்கியத்தில் வைப்பவனே—திட்டமுடன்
63. [30]சோமவாரத்தைத் துதிப்போர்கள் தம்மனதில்
நேம்மதனைக்கொடுக்கும் நேயனே—பூமி புகழ்
64. வெள்ளிக்கிழமை விரத முற்ற பக்தர்கள் தம்
உள்ளத்தி லேயிருக்கும் உத்தமனே—துள்ளும்
65. [31]தந்தி முகம் படைத்துச் சப்பாணியாயிருக்கும்
[32]தொந்தி வயிற்றோனுக்குச் [33]சோதரா—சந்ததமும்
66. [34]சித்தசனுர்க்கும் திசைமுகனுக்கும் சிறந்த
மைத்துனனாய் வந்த மயில் வாகனா—எத்திசைக்கும்
67. வீறு திருச் செந்தூர் மிக்கபரங் குன்றம் முதல்
ஆறுபடை வீட்டுக்(கு) அதிகாரா—நீறணியும்

---

22. வள்ளி. 23. தெய்வயானை. 24. அரியணை. 25. சிவனுக்கு ஐந்து முகங்கள் உள்ளன. 26. மேகம். 27. இனிமை. 28. சக்கரம் ஏந்திய விஷ்ணு. 29. சோறு. 30. திங்கட்கிழமை 31. யானை. 32. விநாயகன் (யானை முகன்) 33. உடன் பிறந்தவன். 34. மன்மதன்.

68. அக்கினிக்கண் ணன்கயிலை யம்பதியாம் ஈசனருள்
கைக்கனிக்குச் சுற்றிவரும் காங்கேயா—திக்கடவி
69. மாலுக்கும் பூமிமட மாதுக்கும் சீதையெனும்
மாதுக்கும் மிக்க மருகனென்றே—[35]மீனமதித்
70. தேரடியில் நின்றிதெல்லாம் செப்பினேன் கேட்டு வெற்றிக்
கூரியவேற் கையான் குமரேசன்—பார
71. இடும்பேச னைக்கூவி இப்பொழுதே சென்றங்(கு)
அடிவாரத் தேரொருவன் ஆரோ—திடமாகப்
72. பன்னுதமிழ் நம்மேற் பகர்கின்றான் நீ விரைந்தே
அன்னவனை இங்கே அழை எனவே—சொன்னவுடன்
73. தாக்கிடும்பன் வந்துன்னைச் சண்முகவர் உத்தாரம்
வாக்குரைத்தார் நீயும் இன்று வா எனவே பாக்யம் எனச்
74. சென்றேனவன் பாற் [36]சிகண்டிமலை, [37]யாதிபனைக்
கண்டேன் மனது களிகூர்ந்தேன்—கொண்டாடித்
75. தோத்திரங்கள் செய்தேன் [38]சுகந்தங்கள் வீசுதிருக்
[39]காத்திரத்தைக் கண்டேன் கருணையுடன்—போற்றரிய
76 செந்தாமரைத் தடமும் திவ்யகரம் பன்னிரண்டும்
சந்திரோ தயம்போலச் [40]சண்முகமும்—விந்தை பெறும்
77. சேவற் கொடியும் சிறந்த மயில் வாகனமும்
மூவர் மனம் மெச்சும் முனைவேலும்—தேவர் மட
78. மாது வள்ளியம்மை மகிழ இனிதிருக்கும்
கோதறு தேன் வாயான் குமரனை யென்—தீதறவே
79. கண்டேன் மனத்தில் கவலை வறுமையெலாம்
விண்டேன் எனதுடலம் விம்மினேன்—அண்டர்பணி
80. கந்தா கடம்பா கதிர்வேலா கங்கை பெற்ற
மைந்தா [41]மயூரகிரி வாசா—நந்தாக்
81. கருணைக் கடலே கனிந்துருகிப் பாடும்
அருணகிரி நாதர்க்(கு அருள்வோய்—திருவிருக்கும்
82. பூங்கொடியாள் வள்ளி புனத்துக்கு ஒரு நிழலாய்
[42]வேங்கை மர மாகி நின்ற வேலோனே—[43]பூங்கமலத்(து)

---

35. பங்குனி உத்தரத் தேர்நிலை. 36. குன்றக்குடி (மயில்மலை) 37. தலைவன் 38. நறுமணம் 39. உடல் 40. ஆறுமுகம் 41. மயில் மலை=குன்றக்குடி. 42. வேப்பமரம். 43. பிரமன்.

83. அண்ணலை வன்சிறைக்குள் ஆக்கிவைத்தாய் சூரை வென்று
விண்ணவர்க்கு மிக்க சிறை மீட்டுவந்தாய்—
[44] அண்ணலுக்கு
84. நன்னயமாகச் செவியில் நற்பிரண வப் பொருளைச்
சொன்னவனே சூழும் சுடரொளியே—என்னை யின்று
85. காப்பாற்ற வேண்டுமென்றேன் கந்தர்திரு வாய் மலர்ந்து
வாய்ப்பாய் உரைத்ததமிழ் வாணனே—[45]தாப்பாய் உன்
86. ஊரையும் உன் தந்தை உயர் பேரையுமுந் தன்
பேரையும் சொல் [46]என்றார் பிரியமுடன்—சீர் பெறவே
87. விற்பனம் சேர் ஊனை நகர் வீரபண்டாரத்தின் மகன்
சுப்பிரமண்யன் என்று சொன்னேன் நான்—அப்போதில்
88. இந்த நகர்க்(கு) உன்னூர் ஈரரைக்காதம் கடந்து
வந்ததென்ன என்று வழுத்தினர்—[47]சந்ததமும்
89. போகா வறுமை புலி போல என் உயிரும்
பாகாரும் தன்மை பசுப்போல—வேகமுறும்
90. துன்பக் கருடனுடன் [48]தோயரவம் என்னுயிரும்
இன்பம் அனுவத்தனையும் இல்லாமல்—முன்பு கண்ட
91. நச்சரவைப் பாய்ந்து நடனமிடுந் தோகை மயில்
பச்சோந்திக்(கு) அஞ்சும் பழமையைப் போல்—மெச்சு
செல்வம்
92. இல்லா வறுமையினால் இல்லாள் முன் வாய் பேசச்
செல்லாமல் நெஞ்சம் தியங்கியே—நல்லோர்கள்
93. கூடுசபைக்(கு) ஏக மனம் கூடாமலே விரைந்தே
ஓடி ஒளித்தேன் [49]உறுகணால்—வாடுவதால்
94. நாடுதொறும் சென்று நடந்தலுத்துப் பேர் கேட்டு
மூடர்களைப் பொல்லாத மூர்க்கர்களைப்—பாடு தமிழ்க்(கு)
95. ஈயாரைச் சார்ந்தோர்க்(கு) இடுக்கண் செய் வாரை மிகத்
தீயாரை மாறாச் சினத் தோரைப்—பேயான
96. சண்டாளரைப் புரட்டுச் சல்லியரை ஏழை முகம்
கண்டிரங்கா [50]லுத்தக் கயவர்களைக்—கொண்டாடிக்

---

44. சிவன். 45. தொகுப்பாக. 46. ஊனையூர் (திருமய்யத்துக்கு அருகில் உள்ளது) 47. எப்பொழுதும். 48. பாம்பு. 49. துயரம். 50. உலோபிகள்.

97. [51]காமனென்றும் [52]சோமனென்றும் [53]காண்டிப
னென்றும்—பலத்தில்
வீமன் என்றும் மிக்க விதுரன் என்றும்—பூமி புகழ்
98. [54]தென்னன் என்றும் மிக்க திருமால் என்றும்
கொடைக்குக்
[55]கன்னன் என்றும் செல்வக் [56]கனகன் என்றும்—
நன்னயம் சேர்
99. [57]மேரு என்றும் [58]கொண்டல் என்றும் வேண்டிய
தெலாம் கொடுக்கும்
[59]தாரு என்றும் பாடிச் சலித்தலுந்துச்—சீர் உயர்ந்த
100. மஞ்சரியும் ஓர்பணமாய் வண்ணம் முக்காற் பணமாய்
அஞ்சுபதம் பாடி அரைப்பணமாய்—மிஞ்சிய கூத்(து)
101. ஆட்டுக்கிசைநாடகத்துறைக் கோர் பழைய
வேட்டியாய்ப் பத்து விருத்தமுடன்—சீட்டுக்
102. கவிக்காயோர் நாள் வயிற்றுக் கஞ்சியாய் வெண்பா
செவிக்கினிய முத்தமிழும் சேரப்—புவிக்குள் ஒரு
103. பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைச் சொற்புலவச்
சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி—நாக்குலர்ந்து
104. ஏடும் புல்லாகி எழுத்தாணியும் தேய்ந்து
பாடும் மனமும் பதைத்தே—ஏடெழுதிச்
105. சுண்டு விரலும் காய்த்துத் தொண்டை கம்மல் பாடியதாற்
கண்டதல்லால் ஓர் பலனும் கண்டிலேன்—வண்டாரவர்
106. செப்புமுலை வேசையர்க்கும் தீக்கும் திருடருக்கும்
தப்பு முன்னோர் கட்டித் தந்திழாப்—மெய்ப்பூஞ்சல்
107. ஆட்டுவார்க்கும் சவுக்கோடு ஐந்து மணிக்கயிற்றால்
மூட்டுவார்க்கும் கொடுப்பர் மூடரவர்—பாட்டினர்க்குச்
108. செய்யார் இனி இவர்பாற் செல்வதனில் சாரமில்லை
ஐயா எனை நீ நன்(கு) ஆதரித்துத்—தொய்யாமல்
109. காவென்றேன் அப்பொழுது கந்தர்திரு வாய் மலர்ந்து
வாவென்றென் னோடு வசனிப்பார்—மேவிய நீ

---

51. மன்மதன். 52. சந்திரன். (தண்ணளி) 53. அர்ச்சுனன். (ஆண்மை) 54. பாண்டியன். (வீரம்) 55. கர்ணன். 56. குபேரன். 57. இமயமலை. 58. மேகம். 59. கற்பக விருட்சம்.

110. என்பாலுன் [60]பாட்டை இயம்பினய் வண்புலவா
உன்பாலென் [61]பாட்டை உரைக்கக்கேள்—நம்பா என்
111. தந்தையுமோர் பெண்ணைச் சடையில் வைத்தார் அச்சடை
அந்தம்இலா ஊமத்தையலரணிந்தார்—முந்த [யில்
112. இடுகாட்டெலும்பை எடுத்தணிந்தார் அன்றிக்
கடுவாய் அரவுகழுத்திட்டார்—திடமொடுறும்
113. தொண்டர்தமை யுண்டார் சூழ்ந்தகடல் நஞ்சையுண்டார்
கண்டிருந்தும் பிள்ளைக்கறியுண்டார்—கொண்டாடிச்
114. சிர்வேடன் எச்சிலுண்டார் தின்றதெல்லாம் [62]பற்றுல்
ஈரேழுலகும் இரந்துண்டார்—பாரறியப்
115. பிட்டுக்கு மண்சுமந்தார் பின்னே பிறகு விற்ருர்
மட்டுக் கடங்கா வளையல் விற்ருர்—திட்டமுடன்
116. வில்லடியும் பட்டார் விஜயன் கையால் [63]ஒருவன்
கல்லடியும் பட்டடம்பு கன்றினர்—நல்மதுரை
117. [64]மாறன் பிரம்படியும் வாங்கினர் பால்தனக்காய்
விறிடையன் கைவாளால் வெட்டுண்டார்—கூறிய
118. சூலாயுதம் படைத்தார் [65]தொல்வேடன் தன்செருப்புக்
காலால் உதைக்கக் களித்திருந்தார்—சீலமுடன்
119. மாடெடுக்கப் பெற்ருர் மருட்கொண்டார் தில்லைதனில்
ஆடெடுத்தார் என்று பெயராயினர்—தாடாண்மை
120. உம்பர்தொழும் குற்ருலத்(து) [66]ஓங்கல் தனிலிருக்கும்
கும்பமுனி கையாற் குறுகினர்—செம்பதும
121. வேதன் சிரசில் ஒன்றை வெட்டினர் மன்மதனைப்
[67]பாதாதி கேசமெல்லாம் பார்த்தெரித்தார்—சூதாய்த்தேர்
122. வண்டிக் காலிற் [68]சோழன் மைந்தனையும் போட்டரைத்
[தார்
சண்டன்எனும் எமன் தனைவதைத்தார்—சென்று எதிராய்
123. முப்புரத்தை வென்றகதை மூவுலகில் உள்ளவர்கள்
செப்புகின்ருர் கேட்டாற் சிரிப்பாமே—இப்படி யென்

---

60, 61. பரிபவம்; துன்பம். 62. போதாமல். 63. சாக்கிய நாயனர். 64. பாண்டியன். 65. கண்ணப்ப நாயனர். 66. மலை. 67. கால் முதல் தலை முடிவரை. 68. மனுநீதிச்சோழன் மகன் வீதி விடங்கன்.

124. தந்தை பிரபலங்கள் தாயார் வளப்பாதை
உந்தனுக்குச் சற்றே உரைக்கக்கேள்—பிந்தாமல்
125. அம்பலத்தில் ஆடினுள் அம்புவிக்கும் தாயானுள்
[69]கம்பநதியில் தவசு கைக்கொண்டாள்—கும்ப
126. முலைகளும் மூன்றுனுள் முனைப்புலித்தோல் போர்த்தாள்
மலையாசனுக்குமகள் ஆனுள்—பலவலைஞர்
127. சாதியிற் சேர்ந்தாள் சத்தி தானென்றுள் அம்மலைமேல்
நீதறவே வீற்றிருக்கும் தேவியந்தம்—ஓதும்
128. உருமாறி யேகுறத்திக் கொப்பாகச் சென்று
கருமாறி யேகைக்கொடுத்தாள்—பரிவாகச்
129. செல்லாயி ரங்கோடிச் [70]சீவர்க்(கு) இருநாழி
நெல்லாற் படியளந்த நீலியென்பர்—சொல்லுவதென்
130. தந்தைபட்ட பாட்டைத்தும் தாயார்க்குண் டேபுலவா
எந்தமையன் செய்தி இயம்பக்கேள்—முந்தஅன்னை
131. தந்தைக்கு முன்பிறந்தார் தந்திமுக மாயினுர்
விந்தைப் பெருச்சாளி மேற்கொண்டார்—முந்த
132. வாதக்கால் ஆனுர் வயிறுபெரிதானுர்
பாதைகுளம் வீதி பலவிடங்கள்—மீதிருந்தே
133. அன்னையைப்போல் பெண்தேடி ஆயாசமாய் மனதில்
உன்னிமரத் தடியில் உட்கார்ந்தார்—பின்னையென்றன்
134. மாமன்வர லாற்றை வழுத்தக்கேள் உந்திதனில்
[71]பூமனையும் பெற்றுர் புவிபுரக்க—நேமி
135. பதித்தார் துளசி தனைப்பாலித்தார் பாம்பை
மிதித்தார் [72]பாலாழிமேல் மெள்ளக்—குதித்தோர்
136. ஆலிலையின் மேல்துயின்றுர் ஆவதனை ஓட்டிவரும்
கோலினையும் பள்ளிகொண்டார் கூசாமல்—சால
137. மனையாளை நெஞ்சில் வைத்தார் மாமோகினியாய்
எனையீன்ற வரோடிணங்கிக்—கனமாய்
138. [73]அரியா புத்ரன்என்றே ஆண்பிள்ளை பெற்றுர்
தெரியாத பேர்களுண்டோ செப்பாய்—பெரியதொரு

69. காஞ்சிபுரம். 70. உயிர்கள், உயிரினம். 71. பிரமன், 72. திருப்பாற்கடல் 73. ஐயனுர்.

139. ஆடகனைக் கொன்றங்கவன்குடலை மாலையிட்டுக்
கூடிருக்க ரத்தம் குடித்துவிட்டார்—கோடியெனும்
140. ஆய்ச்சிமுலைப் பாலுண்டார் ஆவல் அடங்காமல்
பேய்ச்சிமுலைப் பாலும்பிடித்துண்டார்—ஆய்ச்சியர்கள்
141. பாடிதனிலுள்ளோர் பாற்பொங்கல் இட்டதெலாம்
கூடியுண்டார் பால்தயிரும் கொள்ளையுண்டார்—நாடறிய
142. மண்ணையுண்டார் பாடி மடவார் அறியாமல்
கண்மருட்டி ஆடைதனைக் களவாடி—வண்மைக்
143. குருந்தேறிக் கொண்டார் குதிரைகிடையாமல்
பருந்தேறிக் கொண்டார் பகட்டாய்—வருந்தாமல்
144. காய்ச்சியபால் தன்னைக் களவாடித் தம்முடைய
ஆய்ச்சிகையாற் கட்டுண்டு அடியுண்டார்—கூச்சமின்றி
145. ஆடவராய் மிக்க பதினாயிரமார்தர்க்
கூடியே மிக்ககளி கூர்ந்திட்டார்—மோடிசெய்து
146. மாமனையுங் கொன்றுவிட்டார் வஞ்சகமாய் அண்ணனையும்
பூமிப்பிரதட்சணமாய்ப் போகவிட்டார்—[74]நேமியினால்
147. [75]பானுதனை மறைத்தார் பார்த்தனுக்குத் தேரோட்டிக்
கானிலுறை [76]ஐவரையும் காத்திருந்தார்—மேன்மையுடன்
148. சொல்ல ஒண்ணா வஞ்சத் துரியோதனாதிகளைக்
கொல்ல வகை விபரம் கூறினார்—சொல்லுவதென்
149. பாரினிலே புரட்டுப் பண்ணியநிட் டூரமெல்லாம்
ஆரும் அறிவார்கள் அது வல்லாமல்—[77]சீர்கிழவிக்
150. கூனும் நிமிரக் குறித் தெய்தார் மாரீச
மானை எய்தார் தென்னிலங்கை வாழரக்கன்—ஜானகியைக்
151. கொண்டேக மிக்க சிறைக் கோலமுற்ற பெண்ணைநத்திச்
சென்றழைத்துக் கொண்ட வகை தீராதே—வண்டர்
என்று
152. தேட்டிவருக்(கு) ஒட்டாமல் சிறியதா யார்வனத்தில்
ஓட்டி விட்டாள் நல்மூன்று உலகறியும்—[78]பூட்டகமாய்

---

74. சக்கரம். 75. சூரியன். 76. பஞ்சபாண்டவர்கள். 77. கூனி.
78. இரப்பமான முறையில்.

153. வஞ்சகப்போ ராய் மறைந்து வாலியைக்கொன் றார்
காட்டில்
தஞ்சமற்ற [79]பெண்பி(ள்)ளை யைச் சங்கரித்தார்—
ரஞ்சிதமாய்க்
154. கல்லைப்பெண் ணாக்கி விட்டார் காலாந்திரன் செய்தி
சொல்லத் தொலையாதே சொற்புலவா—நல்லதிரி
155. மந்தன் இயற் செய்தி இயம்பக் கேள் யாவருக்கும்
கந்தனென்று பேரானேன் கல்வரைப்போல்—முந்தமுந்தக்
156. கோழி பிடித்தேன் குறத்திதனை மாலையிட்டேன்
பேழை வயிற்றனுக்குப் பின்னானேன்—நீள் கூந்தல்
157. வேடிச்சிக் காய்வனத்தில் வேங்கைமர மாகி யயல்
வாடிக்கை மாதருக்கு மாலானேன்—நாடறியத்
158. தந்தைக்(கு) உபதேசம் சாற்றினேன் அப்பனுக்கு
விந்தைக் குருக்களென்றார் மேதினியோர்—தந்தை
வெகுண்(டு)
159. ஆணவம் பிள்ளை அதிகப்ரசங்கியென்று
மீறக்கி யோகடலில் விட்டுவிட்டார்—நானிலத்தில்
160. தேர் பிறவி யாறேறுர் சிவிகைதனி லேறுவர் நான்
கூர்மயிலின் மீதேறிக் கொண்டிருந்தேன்—சாரமாய்
161. வெண்ணீ(று) அணிந்தேன் மிகுகடப்பந் தாரணிந்தேன்
கண்ணீர(று) ஆனேன் கருணையுடன்—பண்ணுகவிக்(கு)
162. அப்புலவா கேட்டிலையோ ஆண்டி தனையடித்தால்
சாம்பல் பறக்கு மென்பார் தாரணியில்—மாம்பழத்துக்(கு)
163. ஆகவே நான்கயிலை யப்பதியைச் சுற்று முன்னே
தாகத்தால் என்தமையன் தந்தைதனை—வேகமாய்ச்
164. சுற்றி யடிபணிந்து [80]சூதக் கனியதனைப்
பற்றிக்கொண் டார் நான் பதறியே—முற்றி
165. வருகோபத் தாலே மாதாபி தாவை விட்டுத்
[81]திருவாவி னன்குடியிற் சென்றேன்—பரிவாக
166. அன்னை வந்தாள் என்னை அழைத்தாள் ஒருதரமே
என்ன பிள்ளாய் செய்தகுறை யென்னேடா—முன்னம்

---

79. தாடகை. 80. மாம்பழம். 81. பழனி.

167. சகிப்பாரிலையா தமையன் புசித்தால்
பகைப்பாரோ மாம்பழமோ பாரம்—தெகிட்டாப்

168. பழம்நீ எனவே பகர்ந்தாள் அதனால்
பழநியென்றும் பேரானேன் பண்பாய்—விழவார்

169. மல்லவாய் [82] அலைவாயில் வாழ்க்கையுற்றேன் பின்னும்
சொலல்வேண்டும் என்றால் தொலையா—நிலையிருப்பு

170. வேலொழிய என்கையில் வேறுபொருள் உண்டானால்
சாலவுரைப் பாய் நான் தருகின்றேன்—ஞாலமிசை

171. பங்கமிலை நாங்கள்பட்ட பாடெல்லாம் உன்விடத்தில்
சங்கதியாய்ச் சொன்னேன் தமிழ்ப்புலவா—எங்கள்
பிழைப்(பு)

172. இப்படியெல் லாமிருக்க என்பூரில் உன் துயரம்
எப்படிச்சொல் வாய் என்(று) இயம்பினர்—அப்போ(து)

173. உரல் மத்தளத்திடைப்போய் உற்ற துயர் சொன்ன
அருமைக்(கு) இணையென்(று) அதிசயித்துக்-கருணையுடன்

174. தாமரைசூழ் வாவிதனிற் போன வண்டு கஞ்ச
மாமதுவைத் தானுண்ண மறப்போமோ—நேமியினன்

175. மானுக்கா கப்பயந்து வந்து தஞ்சம் என்று சொலச்
சீலக் குருச் சேத்திரன் அதற்காய்—ஞாலமிசைத்

176. தாராரும் நீள்விஜயன் தாமோதரனுடனே
போராடிக் காத்ததுவும் பொய்யலவே—சீர்முனியைக்

177. காக்கும் வகைக்(கு) அரனார் [83] காலன்தனை உதைத்து
மார்க்கண் டனைக்காத்த வாறுபோல்—[84] தீர்க்கமுடன்

178. என்னை யடர்கலிகள் எல்லாம் தீர்த்துப் [85] பகிசு
தன்னைக் கொடுப்பாய் தயாபரா—அன்னை தெய்வம்

179. நீயே எனக்கல்லால் நீடுகதி இல்லை யென்றேன்
மாயோன் மருகன் மனமகிழ்ந்து—நேயமுடன்

180. தன்மைய தாமோ தனக்குவந்த காரியத்தில்
பின்னுக்கு வாங்குவரோ பேருலகில்—நன்னயமாய்

181. மிக்கசன மாய்த் தனது வீட்டில் விருந்து வந்தால்
பக்கத்தில் தள்ளுவதும் பண்பலவே—அக்கதைபோல்

---

82. திருச்செந்தூர். 83. எமன். 84. முழுமையுடன். 85. பெருமை

182. நம்மால் தழைத்த கவி நாவலா உன்னை நான்
சும்மா விடாமல் ஒன்று சொல்லக்கேள்—நம்மடியார்
183. பார்த்திபர் காவிரிப்பூம் பட்டினத்தில் முன் (வை)வசியர்
கோத்திரத்தில் மிக்க குபேரனைப்போல்—வீற்றிருக்கும்
184. அந்நாளில் பாண்டிநகர்க்(கு) [86] ஆனகுடி வேண்டு
மென்று
தென்னுடன் [87]தேசிகர்பால் சென்றுரைத்து—முன்னுன
185. மெத்த உபசாரம் வேண்டுவதெல் லாமுரைத்துச்
சித்தம் திரும்புதற்குச் செய்தி சொல்லிச்—சத்தியமாய்த்
186. [87] திங்கள் கதிர் உள்ளமட்டும் தேசிகரே என்நாட்டில்
உங்கள் மரபுக்(கு) ஒருகாலும்—பங்கம்
187. வர ஒட்டேன் என்று வலதுகை யைக்கொடுத்தே
இரவியொளிர்ரதத்தில் ஏற்றிப்—பரிவாய்
188. வளமையுடனழைத்துவர வந்தே நலமாய்
[88] இளசைப் பதி தனிலே இருந்தார்—களிகூர்ந்தே
189. அஞ்செழுத்தை உட்செபிப்போர் அல்லும் பகலும் எனை
நெஞ்சில் விட்டு நீங்காத [89]திண்ணயத்தார்—ரஞ்சிதமாய்த்
190 திருமாலுக்(கு) அடிமை செய்வோர் தெய்வமெல்லாம்
ஒன்றென்(று)
உரிமையுடன் போற்றி வளர்வுற்றோர்—இருநிதியம்
191. வேண்டினருக்குதவி மிக்ககனத் தைப் பெற்றோர்
[90]பாண்டிநாட் டாசான் பதம்பணிவோர்—நீண்டபுகழ்த்
192. தேசாதிபர் புகழும் செய்ய [91] திருப்புனவை
ஆசான் அழகார் அடிபணிவோர்—நேசமுடன்
193. அன்னை தந்தை தெய்வமுதல் ஆசானைப் போற்றலால்
மன்னவரைக் கூட வணங்காதார்—முன்னுயர்ந்த
194. மேரு கிரியுரைத்தும் [92]வேழம் தனைநிறுத்தும்
பேருலகில் மிக்கான பேரானோர்—யாரும

---

86. நற்குடி. 87. வணிகர்; (தேசிகர்; ஆசிரியத்தன்மையினர்)
87. சந்திரசூரியர். 88. இளையாத்தங்குடி. 89. உறுதியாளர்.
90. பாதாக்குடி மட்டத்தாரின் பட்டம். 91. திருப்புனல் வாயில்—
பாதாக்குடி. 92. யானை.

195. அதிசயிக்கக் காவேரி யாறுதனைப் பஞ்சுப்
பொதியால் அடைத்த புகழாளர்—மதியால்
196. கடலில் எறிந்த பொன்னைக் காசினியோர் தாம்மெச்
இட அழைத்த ஏலேல சிங்கன்—நெடுங்கிணற்றில்
197. விரும்புக்குத் தம்வீட்டில் வெள்ளாட்டி பொற்சவடித்
[93] தாம்பிட்டு நீர் இறைத்த தாட்டியர்கள்—தேம்பவே
198. கல்யாண வாயிலிலே [94] காவணக்கா லுக்குயர்ந்த
நல்பவளக் காலதனை நாட்டினோர்—வல்லிரவில்
199. மன்கதவு வெள்ளிதனை வாங்கிவிட அக்கணமே
பொன்கதவு நாட்டிப் புகழ்படைத்தோர்—நற்புவியில்
200. சீரகப்பூந் தாரணிந்தோர் சிங்கக் கொடிபடைத்தோர்
காரிணையாய்ச் செம்பொன் கவிக்கீவோர்—பார்புகழும்
201. கர்த்தன் [95] இளசைக் கயிலாச நாதரையும்
நித்தியகல் யாணியையும் நெஞ்சில் வைப்போர்—நத்தினரை
202. [96] ஆட்கொண்ட நாதருடன் ஆம்சிவபுரந்தேவி
தாட்கமலம் போற்றிவளர் தாட்டியர்கள்—வேட்(கு)ஆம்
203. வடிவாரும் [97] பேட்டை வளரொளியோர் மிக்க
வடிவுடையா ளைப்பணியும் மாண்பார்—படிபுகழும்
204. தெள்ளு தமிழ் சேர் திரு [98] வேளூர்க் கற்பகமாம்
பிள்ளையா ரைப்பணியும் பேராளர்—அன்னிநிதி
205. செய்யும் [99] நியமச் செயங்கொண்டசோழீசர்
தையல் சவுந்தரியைத் தான்பணிவோர்—வையமகிழ்
206. [100] பூவுடைய ஊரில் புகழ்தேசிகர் அடியோர்
ஆவுடைய மாதினடி பணிவோர்—தேவர் புகழ்
207. [101] வேலங்கரில் மிகுந்த கண்டீசரொடு
சாலவும்கா மாட்சி இருதாள் பணிவோர்—[102] மேலிலுப்
208. தான்தோன்றி ஈசரையும் சங்கரியையும் போற்றும் [பைக்
மான்மதம்சே ருங்களப மார்மார்பர்—தேன்சிறந்த

---

93. கயிறு. 94. பந்தல்-கொட்டகை. 95. இளையாத்தக்குடி. 96. இரணியூர். (இறைவர்) 97. வயிரவன் கோவில். 98. பிள்ளையார்பட்டி. 99. நேமம். 100. சூரக்குடி. 101. வேலங்குடி. 102. இலுப்பைக்குடி.

209. [103]மாதைப் பதியில் வளர்ஐநாற் றீசர்மகிழ்
காதல் பெரியவரைக் கைதொழுவோர்—சாதகமாய்
210. ராசசிங்கம் வாழ் பூமிநாதர்சிவ காமியையும்
நேசமுடன் போற்றி நிறைந்திருப்போர்—வாசனையாய்
211. நானிலத்தோர் கொண்டாட [104]நம்மிடத்தில் மிக்க அன்ன
தானமடம் கட்டிவைத்த தாளாளர்—மேன்மைத்
212. திருவாசி னன்குடியிற் சென்றெதிர்ந்த பேர்க்குத்
தருவாய் கொடுக்கும் அன்ன தானர்—இருநிதியம்
213. நாடறியப் பூவுலகில் [105]காணிமுந்திரி தேடிக்
கோடியளிக்கும் கொடையாளர்—தேடிநிதி
214. மாயேஸ்வரர்பூசை மாரு(நு) தரிபூசை
சேயார்மும் மூர்த்திப்பிரதிஷ்டையொடு—மாயாத
215. ஊரணிகள் [106]கூபம் இவையுண்டு பண்ணி மிக்கதர்மம்
தாரணியிற் செய்திட்ட சற்புருஷர்—வாரஞ்
216. சிகரத்தில் ஏற்றிவைத்த தீபம்போல் ஏழு
நகரத்தார் எல்லாம் நமதடியார்.—மிகஅவர்கள்
217. வீரர் உனைக்காக்க வேண்டித் திருமுகமும்
தாரேன் அவரிடத்தில் தான் சென்று—பூரணமாய்க்
218. கனகவணி சேகரது கையில் திருமுகத்தைக்
மனமகிழ ஈவாய் வணிகர்—அனைவர்களும்
219. குன்றுக்குடியில் குமரர் திருமுகத்தைக்
கண்டவுடனே களிகூர்ந்து—கொண்டாடி
220. உன்னை யடர் தம்பிகள் ஓடக் கனகநிதி
தன்னைக் கொடுத்து (ஆ)தரிப்பார்கள்—இந்நேரம்
221 செல்லுவாய் என்று திருமுகம்தந் தேயுனது
அல்லல் அறும் என்றனுப்பினர்—நல்லதென்றே
222. இங்கிதமாய் மெய் கூர்ந்து இனிதாய் நடந்து கொற்ற
மங்கலத்திற் சென்றேன் வணிகேசர்—சங்கதியாய்க்

---

103. மாத்தூர். (95.—முதல் 103வரை உள்ள ஒன்பதும் நகரப் பொதுக்கோவில்கள்.) 104. குன்றுக்குடி. 105. காணி,—அணுவின் ஐந்தில் ஒரு பாகம். "காணிகாணியாகப் பொருளீட்டிக் கோடி கோடியாகக் கொடுப்பது" வணிகர் வழமை. 106. கிணறு.

223. கூடி உலகாயி கோயிலுக்கு நேர்வடக்காய்
நாடி விடுதிக்குள் நன்னயமாய்—நீடிவளர்
224. மாவுக்கு மேற்காய் வணிகேசர் எல்லோரும்
காவணத்துக் குள்ளிருந்தார் கண்டேன்நான்—பூவ(ண்)
225. இந்திரரைப் போலிருந்த ஏழுநக ராதிபர்க்குக் [ணிந்த
கந்தர் திரு முகத்தைக்காட்டினேன்—சொந்தமுடன்
226. வித்தாரமாய் வாங்கி வேலர் திருமுகத்தை
வைத்தார் சிரசில் வணிகேசர்—உற்றதமிழ்
227. கொண்டமயில் மலையிற் குமரர்பால் என்துயரை
விண்டதுவும் என்னிடத்தில் வேலவரும்—பண்டைச்
228. சலிப்பை உரைத்ததுவும் சாகரந்தான் சுட்டாற்
கலக்கச் சலமுண்டோ கந்தா—நலத்துடனே
229. என் கவலை தீரவகை என்னவென்று கேட்டதுவும்
வண்மைக் குபேர வணிகருக்காய்—அன்பார்
230. திருமுகத்தைத் தந்ததுவும் செப்பினேன் அப்போ
மருவுநிதி மிக்க வணிகேசர்—ஒருமையுடன்
231. வந்த திருமுகத்தை வாசித்தார் அப்போது
சிந்தை மகிழ்ந் தேயஞ்சல் செப்பினர்—கந்தமலர்
232. வேணநிதியீந்தார் மிக்க வஸ்திரம் கொடுத்தார்
பூணும் எனத் தங்கநகை பூட்டினர்—ஊணுறவாய்
233. உண்டிருக்க நெற்கொடுத்தார் ஊரும் பலவாகக்
கண்டிருக்க மெத்தக் கனம் செய்தார்—கொண்டாடித்
234. திட்டமுடனே வணிகர் செய்யும்கல் யாணத்தில்
கட்டளையாய் ஓர்பணமும் கண்டெழுதிச்—சட்டமுடன்
235. சாதனமும் தந்தார் சஞ்சலமெலாம் தீர்த்தார்
மாதனவானாக எனை வாழ்வித்தார்—ஆதலினால்
236. துங்கமலையான் வாழி! துய்யதமிழோர் வாழி!
எங்கும் படியாள் இறை வாழி!—மங்களமாய்
237. வாழு குமரேசர் மகராஜர் தென்னிளசை
ஏழு நகரார் வாழியே!

(திருமுக விலாசம் முற்றிற்று)

## மரகத விநாயகர் துதி.

பாரேழும் ஏழுவழி நகரத்தார்க்(கு) என்றும்
கோவாழும் செல்வக் குலதெய்வ—மாய்வாழ்
மரகதவி நாயகனை மாமலர் தூய் வாழ்த்த
வரநலவாழ்வெல்லாம் வரும்.

(நகரத்தார் சரித்திரம்)

---

குறிப்பு :—திருமுருகன் நகரத்தாருக்கு எழுதியனுப்பியதாகக் கற்பித்து முத்தப்பர் பாடிய இத்திருமுக விலாசத்தைக் கொத்தமங்கலத்தில் குடியிருந்த நகரக் கூட்டத்துக்கு வலையூர் சுப்பிரமணிய பண்டாரம்வசம் கொடுத்தனுப்பினார். இதைப் பாடவேண்டிய சந்தர்ப்பம் என் எப்படி நேர்ந்தது என்ற விபரங்கள் "முத்தப்பர் வரலாறு" என்னும் நூலில் கூறப்பெற்றுள்ளன.



## முருகன் தோத்திரம்

குறிப்பு :—பாதரக்குடி சேனாபதி சுவாமிகளும், கோவிலூர் ஆண்டவரும், முத்தப்பரும் பழனிக்குச் சென்றனர். சேனாபதி சுவாமிகளுக்கு வயிற்றுப் போக்கு (பேதி) ஏற்பட்டது. அவ்வயிற்றுநோய் நீங்குவதற்காக முத்தப்பர் கீழ்க்கண்ட இருபது பாடல்களையும் பாடினார். முழு விபரங்கள் "முத்தப்பர் வரலாற்றில்" காண்க.

ஓம்
தமிழுக்கு வெற்றி

# முத்தப்பர் பாடிய முருகன் தோத்திரம்

## 1. குன்றக்குடி.

(க) "ஏரிலகு தாடகையை மாரீசனைக் கரனை
இனிய திரிசிரனை விண்மீ(து)
இருந்திடு கவந்தனை விராதனை அயோமுகியை
எதிராத ஜெய வாலியைக்
கூரிலகு வச்சிர எயிற்றனை நிகும்பனைக்
கும்பனொடு அதிகாயனைக்
கும்பகர்ணனை விகட ஐம்புமாலியை விருது
கொண்ட இந்திர ஜெயித்தைத்
காரிலகு புயன் இராவணனைத் தடிந்து கோ
தண்டம் ஒரு கையில் ஏந்தும்
தசரத குமார ரகுராகவன் என வந்தவ
தரித்திடு முகுந்தன் மருகா!
சீரிலகு சங்கநிதி சேனுபதிக் குரு
சிகாமணிக்(கு) அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(உ) "மானுழி யங்கையினில் வைத்தநின் தந்தை கொடு
மறலி யலறிட உதைத்தே
மார்க்கண்டன் மேல்தயவு வைத்து முன் பதினறு
வயதும் கொடுக்க விலையா?
கானுறு குழலி உன் தாய் அன்பு புனைகின்ற
கவிராஜ பண்டிதன் பின்
காசி மட்டும் சென்று அன்னம் சமைத்துக்
கனிந்து அளித்திட வில்லையா?
மீனுன வடிவன் உன் மாமனும் கவிஞன் மொழி
மீருது அவன் படுக்க
மின்பாய் சுருட்டிச் சுமந்தவன் பின்னே
விரைந்து சென்றிட வில்லையா?
சேனுபதிக் குருசிகா மணிக்கு அருளும் நீ
செய்குவதும் மா பாரமா?
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(௫) "கம்பமதயானையின் மருப்பை அழகொழுகு பொற்
கலசத்தை நிகரிட்ட பூங்
களபத் தனப் பணவலாட்டி நாயகன்; அமுத
கலை கொண்ட நளின சந்த்ர
விம்ப வதனத்(து) அயனை முன் பிரணவப் பொருள்
விளம்பெனக் கேட்டு அவனும்
விளம்பாததாற் சிறையிலிட்டவன் தன் தொழிலில்
வீரவாகுவை இருத்தி
உம்பர் பரவும் குலிச பாணிக்கு முடி புனைந்து
உயர் நிலையின் மீது வைத்தே
உரகன் முடி கிடுகிடு என நடனமிடு மயிலில் வரும்
உத்தண்ட கோலாகலா!
செம்பொன் மகமேரனைய சேனாபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில்மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(௬) "மல்லல் உற்றிடு பாண்டி நாட்டிற் பரங்குன்றில்
வளர் சரவணப் பொய்கையில்
வந்து நற்கீரன் நிஷ்டையிலிருக்கின்ற சிறு
வரையின் மாருத விசையினால்
நல்லரசினிலை நீரினங் கரையில் வீழ்ந்து மீ
னாகவும் பறவை எனவும்
நலந்திழுத் திடர்ப்படல் கண்டு கண்ணாலிந்த
ஞாயத்தினை வியக்க
அல்லல் செய்தலகை யவ்வரைக் குகை தன்னிலே
அடைத்திடப் பரமன் எனவும்
அடுக்கலை இழுத்துத் தகர்த்துக் கடுஞ்சிறை
அகற்றும் வீரப் பிரதாபா!
செல்லனைய கொடையாளி சேனாபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(ரு) "விண்ணவர் இறைஞ்ச மணிமலர் சிந்துதரு நிழலில்
விற்றிருந்திடு வலாரி
விகடபத அயிராவதம் செய்த புண்ணிய
விசேஷத்தினுல் உதித்த
சுண்ணந் திமிர்ந்த கனதன மென் பசுங்குழைத்
தோகை சுர குஞ்சரிக்கும்
துவளு செங்கதிராடு செந்தினைப் புனமதில்
துடி மருங்கு அசைய நின்ற
தண்ணமுத மொழி கயற்கண்ணி இளமானீன்ற
தமனியப் பூங் கொடிக்கும்
தாமமலர் மாலையணி பன்னிரு புயாசலா!
சங்கிராம வேலாயுதா!
தெண்ணிலா ஒழுகுமதி சேனுபதிக்குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(சு) "கந்தா! குறிஞ்சி நில மன்னு! சிகாவலா!
கார்த்திகேயா! கடப்பா!
காங்கேயா! சரவணபவா! குகா! முருகா!
கயற் கனுள் ஈன்றெடுத்த
மைந்தா! பசுங்குழல் தெய்வ குஞ்சரி வேட
வள்ளி நாயகி சமேதா!
வரை பகமெறிந்த சுடர் வேலவா! சண்முகா!
வளர் ஆறு வீடதான
விந்தா! வயங்கு சேவற் கொடி படைத்திடு
விசாகா! தமிழ்ப்பாவலா!
வெங்கய முகத்தண்ணல் சோதரா! தாருகனை
வென்று வரு தண்டாயுதா!
சிந்தாமணிப் பிரபல சேனுபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்டமணி முகில்மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(எ) "மகமேரு முடியிலிடு மணி விளக் கென்னவும்
வானிரவி மதியுள்ள நாள்
மட்டும் அழியாமலே நிலை பெற்று மென் மேலும்
வளரு சற்கீர்த்தி பிறவே
புகல் காமதேனு கற்பக விருக்ஷத்தினும்
புகரு சுகிர்த சிந்தாமணி
புனிதநிதி சங்கநிதி பத்மநிதி நீலமுகில்
புகழு மூவேழு வள்ளல்
அகலாமல் ஒருருவதாகச் செவந்தி மீற
யவன் மகன் எனச் செனித்த
அந்தணர் பசுந் தமிழ்க் கவிஞர் மனமகிழ நிதி
அள்ளிக் கொடுக்க இந்தச்
செகமீதிலே வந்த சேனாபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(அ) "எள்ளளவு தானும் மனதிரக்க மில்லாத் தொம்பர்
எனினு முன் கடைவிழியினால்
ஏறிட்டு நீ பார்த்த காலத்தில் அவர்கள் தம்
இடரெலாம் நடுநடுங்கித்
துள்ளித் துடித்து வெண் சுடர் கண்ட பனி எனத்
தொலைந்து விடுமே! இருப்புத்
தூணும் துரும்புக் கிளைத்திடும் துரும்பு மொரு
தூணாகும் நின் கருணையால்
வள்ளலே! நின் மகிமை நான்மறை களாலும்
வழுத்துதற்கு எளிதாகுமோ?
வல்லவர்கள் அரிஹர பிரமனும் குலிசனும்
வணங்கு சரணார விந்தா!
தெள்ளமுத குணசாலி சேனாபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!"

(க) " பூமேவு மணிமவுலி யுற்ற முடியாறும் அற்
புத நுதலில் இடு திலகமும்
பொழி யருட் பார்வை ஈராறும் வச்சிரமுருகு
பொற் குழை இலங்கு காதும்
மாமேவு சண்முகக் கமலமும் கனிவாயும்
வாகுவிற் கேயூரமும்
மலர் நீபமாலை யாபரண நிறை மார்பமும்,
வரை தொட்ட செங்கை அயிலும்
நாமேவு தங்க அரைஞாண் இட்டகிண்கிணி
நறுந்துகில் புனைமருங்கும்
நவமணிப் பரிபுரச் சரணமும் காண என்
நாளும் மயிலேறி வந்தே
தேமேவு சுகிர்தநிதி சேனாபதிக்குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்டமணி முகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டிமலை முருகேசனே!"

(ய) " சத்திரபதி தென் குழந்தாபுரிக்காசான்
தரு முத்த விஜய ரெகுநா
தபபோத குருராஜன் இலகு செங்கோல் தனைத்
தாங்கித் தழைத்திருக்க
மத்தகஜ நிறை யறிந்திளசையம்பதிதனில்
வந்து தனபதியதாக
வளர் எழு நகர் வணிகர் தேன் பாலுமாக ஒரு
மனதாய்ச்செழித்திருக்க
இத்தலமதிற் புத்ர விர்த்தியாய் நவரஸம்
இலங்கு தமிழ் மாலை கொண்டுன்,
இரு சரண பங்கேருகம் பணிந்திசை பெற்ற
இரு நிதி படைத்திருக்கச்
சித்த பரிசுத்தமிகுசேனாபதிக்குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்டமணி முகில் மேல் அடர்ந்தகொடுமுடி சூழ்
சிகண்டிமலை முருகேசனே!"

(முற்றும்)

## 2. பழநி.

(க) " ஞாலம் ஈரேழுலகு இருநூற்று இருபத்து
நான்கு புவனப் பரப்பும்
நாடரிய ஆயிரத் தெட்டண்டமும் கெடி
நடத்தி ஒரு குடை நிழற் கீழ்
நீல மணி முகில் தவழ நின்ற கிரவுஞ்சகிரி
நிட்டையிற் புடை நெருங்க
நிறை வீர மாமயேந்திர புரியில் நவமணி
நிறைத்த அரியாசனத்தில்
கோலமுடி சூடி நிலை பெற்றிருந்ததிககன
கொடுமை புரி சூரபதுமன்
குலமும் அவனுடலும் நெறுநெறெனக் கிழித்து மிரு
கூறிட்ட வடிவேலவா!
வாலசந்திரனை சேனுபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற்குலவுசர
வணபவக் குமர குருவே!

(உ) " சந்திர சேகர நீலகண்டனின் குமரனே!
சம்பு நிஷ்கள சொரூப
சச்சிதானந்த பரிபூரண திகம்பர
சடாட்சர கமல சரண
சுந்தர மகாதேவ வேத கிதன் அரிய
சொர்ணகிரி லோக நாதன்
சுயம்பு(உ) மாபதியான முக்கட் பரஞ்சுடர்ச்
சோதி யருள் கருணைநிதி!
இந்திர முகுந்த பிரமாதியரின் முன்பரன்
இசைந்து கேட்கவு மவர்க்கே
இலகு பிரணவமந்திரப் பொருளை ஓர் காதில்
இயம்பு சற்குரு நாயகா!
மந்திர தயாநிதி சேனுபதிக் குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவு சர
வணபவக் குமரகுருவே!"

(௩) " தின முனது சரணமறவாதவன் அருணகிரி
நியான சந்தத முணர்ந்தே
திருவுளம் மகிழ்ந்து மவன் நாவினில் அட்சரம்
செங்கையால் எழுதவிலேயோ?
கனதயிரியமான இறையவர்களுக்குரம்
கற்பித்து நற்கீரர்தன்
கண் கலக்கம் கண்டு வரையிற் குகை தனில்
கவியினுற் பாடி யழவும்
தனதடிமையான பகழிக்கூத்தன் நற்சுவை
ததும்பவும் உரைத்த பிள்ளைத்
தமிழுக்கு வாரானை சொல்லவும் மயிலில் என்
சாமி நீ வரவில்லையோ?
வனசநிதி சேனுபதிக்குரு சிகாமணி
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!"

(௪) "வேதநாரத முனிவன் வந்து மக்கேற்றதொரு
மின்னையான் கண்டேன் என
விபரமாய் வள்ளியின் இலட்சணம் முழுது மவன்
விள்ளவும் கேட்டடங்காக்
காதலால் எய்திக் குறிஞ்சி நில மீதினில்
கானவர் தினைப் புனத்தில்
கண்டுறவு கொண்டு முயிரொன்றுட லிரண்டுடன்
கனியென முளைத்து நின்றே
நாதச் சிலம்பு சரணத்தினிலசைந்திட
நடந்து பூங்கிளிகளோட
நாவரற்றிய வள்ளி நாயகியை வனமதில்
நயங் கொண்டணைந்த குமரா!
மாதவன் சேனுபதிக் குரு தயாநிதி
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!"

(௯) " பணி கலாமதி அறுகு புனல் இதழிமாலை யணி
பரமனும் உலகினைச் சூழ்
பச்சைக் கொடிக்கருணை பூத்த விழி உமை
புருவ பார்வையும் களிகூரவும்
அணிகுவி சபாணி நறவொழுகு மென் கமலமலர்
அந்தணன்; அனந்தசயனன்
அமரர் முதல் அக மகிழக்ககன மலர்மழை சொரிய
அகில புவனம் தழைக்கத்
துணிலனோடு சலதியில் தருவென மூளைத்திடும்
சூரன் உயிர் வானேறவும்
துதிசர வணத்தினில் செனித்தருள் தனிப்பரஞ்
சுடரென்ன வந்த சேயா!
மணிமுகிற்கிணையான சேனாபதிக் குரு
மனோரதப்படி யருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவு சர
வணபவக் குமரகுருவே!"

(௧௦) " கலிகால மீதினில் கண் கண்ட தெய்வம் நீ!
கருதும் அடியார்கள் வினவும்
கருமம் நிறைவேறவும் தயவு செய்யாத தென்ன
காரணம்? சுவாமி மனது
வலிதான கல்லோ? இரும்போ? கனங் கொண்ட
வயிரமோ? தானிரங்கா
வகையேது? சித்தம் திரும்பினால் இப்போது
மலையும் அணுவாகும் உலகில்
புலியின் முன் நரி ஊஞ்சலாடுமா? வினையெல்லாம்
பொறியிட்ட பஞ்சு போலாம்
பொய்யரிடமணுகாத மெய்யனே! எவரும் நின்
புதுமை அளவிடலாகுமோ?
மலிவான புகழ்பெற்ற சேனாபதிக் குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!"

(எ) "பொன்பூத்தரத்னமுடி புனைகின்ற சிகரமும்
புண்டரத்திலக நுதலும்
பொழிகருணை விழியும் நவமணிமுருகு காதினில்
பூண்ட குண்டல வடிவமும்
தென்பூத்த ச்ண்முகக் கருணையும் பவளவாய்
சிறுதரள முறுபல் நிரையும்
ஜெயநீபமாலை யாபரணம் அணிமார்பமும்
திருநீறு கொண்ட புயமும்
மின்பூத்த மிடுகு கங்கண மிட்டகையினில்
வேலுந்துலங்க மயில்மேல்
மேவு சிற்றிடையில் சதங்கையும் பாதார
விந்தமும் காண வந்தேன்
மன்பூத்த சிவசமய சேனுபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!"

(அ) "கதிதரும் சரவணநதிக்குட் படிந்து உதய
காலத்தில் நியமமாகக்
காயத்ரி நெட்டுருக் கொண்டு நிறைவேற்றிக்
கருத்தில் சடாட்சரத்தைத்
துதி செய்து மூன்று தரம் உனது பொன்னாலயம்
சுற்றி வலமாக வந்து
துஜகம்பமதில் நின்று தியானமும் செய்துபின்
தொழுது நின் சந்நிதியினில்
அதிக தயவோடுதரு விபூதியினை வாங்கியிரு
அங்கையால் நெற்றி மீதே
அணிந்துலகில் நீடூழி மார்க்கண்டன் என வளரும்
அழகு லட்சுமி விலாஸன்
மதிவதனி சேனுபதிக்குரு சிகாமணி
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற்குலவுசர
வணபவக் குமர குருவே"

(ஸ) "கலகலி உபநிடதமிலே கண்ட மெய்ஞ்ஞான
ஜனகன் உலகிற் ஜெனித்த
தரு விழிநாத சிந்தாமணியினைச் சிறிய
தந்தையெனும் உரைகொண்டமால்
விகசித சுகமலமுகமிது சுப்ரமண்ணியமத
வேட்(கு) இளைய சொர்ணமேரு
விரதமிகு பூசுரன் செம்மலரின் நற்பெயர்
மேயவனை உலகுமகிழ

அகமகிழ மாமன் என அருமையாயத்தினம்
அளித்திடுங் கருணை வள்ளல்
அமுதகுண விப்ரகுலதிலக செவ்வந்திமறை
யவன் உதவு புருஷ ரத்னம்
மகத்தருதயாநிதி சேஷபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமரகுருவே!"

(ம) "புவனரக்ஷகி பெரிய நாயகி சமேதராய்ப்
பூதலச் சீர் மீதினில்
புராதனமதாய் முளைத்திடுகின்ற சோதிமுப்
புரதகன சூலபாணி
பவளச் சடாமகுட பாலலோசன உமா
பதிபழம் பதிநாதர் பொற்
பாதபங்கேருக பூஜனை புரிந்தே
பணிந்தருள் சனற்குமாரன்
தவமுயர்த்திய சிஷர் மணிமகோற் சவசிவ
சற்குரு கடாட்சமுற்றே
தருதிருப்புனல் வாயில் முதன்மையாய்வந்
தவதரித்த சந்தான குரவன்
மவுனசின்மயஞான சேஷபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப்பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமரகுருவே!"

முற்றும்

தோவாடபேடிக் பிரஸ், புதுக்கோட்டை—1000—29-8-51.

# வேள்வணிகருக்கு வேண்டுகோள்

பெருமக்களே! நண்பர்களே!

"வணிக மக்கள் செல்வத்திலும் சிறப்பிலும் மேம்பட வேண்டும்" என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து தனது அருள் வாக்கினாலே தனவணிகருக்குத் தமிழ் வாழ்வீந்த பாடுவார் முத்தப்ப செட்டியாரின் கொள்கையிலே ஈடுபட்ட நாங்கள் வணிகப் புலவர் பெரு மக்கள் வரைந்த நூல்களையெல்லாம் வெளியிட்டு நமது குலப்புகழை மலைவிளக்காக்கும் முயற்சியிலே தலைப்பட்டு இதுவரை "முத்தப்பர் வரலாறு" "நகரவாழ்த்து" "திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும்" என்ற மூன்று நூல்களையும் வெளியிட்டுள்ளோம்.

நம்மிடையே தோன்றிய நூற்றுக்கணக்கான புலவர் களின் ஏட்டுப்படிகளையும் பழம் பதிப்பு நூற்களையும் தொகுத்து வைத்துள்ளோம். இவைகள் முழுதும் விரை விலே வெளிவர வேண்டுமானால் செல்வம் படைத்த பெரு மக்கள் வெளியீட்டுச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவரை மூன்று பெருமக்கள் இவ்வுதவிகளைச் செய்துள்ளார்கள். இத்துடன் குலநலத்திலே கருத்துடைய ஒவ்வொருவரும் ரூ. 25 அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு தொகையை நன்கொடையாகத் தந்து ஆதரிப்பார்களானால் அவர்களை எங்கள் சிறப்புறுப்பினர்களாகவும், ஆதரவாள ராகவும் ஆக்கி எங்கள் வெளியீடுகளை எல்லாம் விலையின்றி அளிப்பதுடன் அவர்களது உதவியை என்றென்றும் பாராட்டுவோம். இதுவரை பத்துப்பேர் சிறப்புறுப்பினராகச் சேர்ந்துள்ளனர். இவர்கள் தொகை பெருகுமானால் எங்கள் வெளியீடுகளின் எண்ணிக்கையும் வளரும்.

எனவே நல்லுள்ளம் படைத்த தாங்கள் இவ்வேண்டு கோளுக்கிசைந்து, தங்கள் உளம் ஒப்பிய ஒரு தொகையை நன்கொடையாகத் தந்து எங்கள் ஆதரவாளராகி வாழ்வில் வளமும் மாசிலாப்புகழும் பெற்று வாழுமாறு நம்பிக்கை யுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்புள்ள,
மன்னவன் வெளியீட்டார்.

கோவாப்ரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை—1000—30-8-51.